IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.
DEPOSITION OF WITNESS

OS.NO. - 76/2017
D.W.1 - முருகன், த/பெ.சுப்பிரமணி
DATE - 27.02.2024

பி.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

வாதி விஸ்வநாதன் என்னுடைய அண்ணனா என்றால் ஆமாம். 1 ஆம் பிரதிவாதி சுப்பிரமணி என்னுடைய தகப்பனார் என்றால் சரிதான். 2 ஆம் பிரதிவாதி ஜகதாம்பாள் என்னுடைய தாயார் என்றால் சரிதான். வாதி தாவா சொத்தில் 3 இல் ஒரு பாகம் கேட்டு இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவாவில் இரண்டு அட்டவணை சொத்துகள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் முதல் அட்டவணை சொத்து ஆதியில் என்னுடைய தாத்தா கோவிந்தசாமிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அவர் இறந்த பிறகு அவரின் பிள்ளைகளான சுப்பிரமணி கவுண்டர், நடராஜன், ராமஜெயம் மற்றும் உலகநாதன் ஆகியோர்களுக்கிடையே 21.03.1990 தேதியில் பாகப்பிரிவினை ஏற்பட்டது என்றால் சரிதான், அந்த பாகபிரிவினை பத்திரத்தில் என் அப்பா 1ஆம் பிரதிவாதி சுப்பிரமணிக்கு 62 செண்ட் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த 62 செண்டில் 29 1/2 செண்ட் தான் தாவா ஏ அட்டவாணையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஏ அட்டவணையில் உள்ள முதல் அயிட்ட சொத்தை என்னுடைய தந்தை சுப்பிரமணி 6 ஆவது பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அதே போல் தாவா 2 அயிட்ட சொத்தை 7 மற்றும் 8 ஆவது பிரதிவாதிகளுக்கு

கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். 3 அயிட்ட சொத்தில் 7 1/2 செண்ட் 5 ஆவது பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். தாவா ஏ அட்டவணை சொத்துக்கள் கூட்டு குடும்ப சொத்துக்கள் என்றால் இல்லை. தாத்தா சம்பாதித்த சொத்துக்களாகும். என்னுடைய தந்தைக்கும் அவரின் சகோதரர்களுக்கும் இடையே பாகபிரிவினை ஏற்படும் போது வாதி பிறந்து இருந்ததார் என்றால் சரிதான். வாதி 1966ல் பிறந்தார் என்றால் சரிதான். நான் 1972ல் பிறந்தேன் என்றால் சரிதான். வாதி 1987ல் இராணுவத்தில் சேர்ந்தார் என்றால் சரிதான். அவர் இராணுவத்தில் சேரும் போது எங்கள் குடும்பம் கூட்டு குடும்பமாக இருந்தது என்றால் சரிதான். வாதிக்கு 1996ல் திருமணம் நடந்தது என்றால் சரிதான். வாதி இராணுவத்தில் சேர்ந்து அவர் அனுப்பிய பணத்தை கொண்டு தான் எங்கள் குடும்பம் வாழ்ந்து வந்தது என்றால் இல்லை.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி கோரிக்கையின் பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது.**

P REVATHY

Digitally signed by P REVATHY